பள்ளிக்கல்வித் துறை
தலைமைச் செயலகம்
சென்னை 9

கடிதம் எண் 2022/தொக3(1)/2022-2, நாள் 20.05.2022

அனுப்புநர்
திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்,

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர்,
சென்னை-6.(இணைப்புடன்)

ஐயா,

பொருள் : தொடக்கக் கல்வி ஊதிய நிலை 10-இல் ரூ.20600-65500 என்ற ஊதிய விகிதத்தில் உச்ச நிலையான ரூ.65,500/-ஐ (தளம் 40) அடைந்த இடைநிலை ஆசிரியர்களுக்கு, ஒரு நபர் குழு பரிந்துரையின் அடிப்படையில் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.90, நிதித் (ஊ.பி.)துறை, நாள் 26.02.2021-ன்படி திருத்தி அமைக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் (ரூ.20600- 75900) வருடாந்திர ஊதிய உயர்வினை அனுமதித்தல் - தொடர்பாக.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண்.90, நிதி(ஊ.பி) துறை, நாள் 26.02.2021.

2. தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பொதுச் செயலாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட மனு, நாள் 03.02.2022.

/*/

பார்வையில் காணும் அரசாணை மற்றும் மனுவின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பொதுச் செயலாளர் பார்வை இரண்டில் காணும் தனது மனுவில், திருச்சி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை வட்டாரக் கல்வி அலுவலர் மற்றும் தொட்டியம் வட்டாரக் கல்வி அலுவலர் ஆகியோரின் செயல்முறைகளில் ஊதிய விகிதத்தில் தளம் 40 எனும் உச்சநிலையான ரூ.65,500/-ஐ அடைந்த இடைநிலை ஆசிரியர்களுக்கு வருடாந்திர ஊதிய உயர்வை அனுமதித்திட

மறுத்து, அனுமதிக்கப்பட்ட வருடாந்திர ஊதிய உயர்வினை இரத்து செய்ததோடு சார்ந்த ஆசிரியர்களிடம் விளக்கமும் கோரப்பட்டுள்ளது என்றும், இது போன்ற நிகழ்வுகள் தமிழ்நாடு முழுவதுமுள்ள பல வட்டாரங்களில் நடைபெற்று வருகிறது என்றும், எனவே, பதவி உயர்வு எதுமின்றி ரூ.20,600 - 65,500 எனும் ஊதிய விகிதத்தில், உச்சநிலையான ரூ.65,500-ஐ அடைந்த இடைநிலை ஆசிரியர்களுக்கு, அரசாணை (நிலை) எண்.90, நிதித்(ஊ.பி)துறை, நாள் 26.02.2021-ன்படி திருத்தி அமைக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் (ரூ.20,600 - 75,900 ) வருடாந்திர ஊதிய உயர்வினை அனுமதித்திடும் வகையில் உரிய ஆணையினை பிறப்பிக்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

3. தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள், 2017-இன் விதிகளில் விதி 11(3)-இல் அரசு ஊழியர் 01.01.2016 அன்று அனுமதிக்கப்பட்ட ஊதியக் கட்டில் அல்லது ஊதிய விகிதத்தில் (01.01.2006 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது) இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக உச்சபட்ச ஊதியத்தினை பெற்றுவருவாரேயானால், அத்தகைய உச்சபட்ச ஊதியத்திற்கு நிகராக திருத்திய ஊதிய விதிகள்,2017-இன் விதி 7-இன் கீழ் திருத்திய ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்ட பின்னர், தேக்கமடைந்த ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கும் ஒரு கூடுதல் ஊதிய உயர்வு வழங்கலாம் எனவும், அவ்வாறு கூடுதல் ஊதிய உயர்வு வழங்கப்பட்ட பின்னர் நிர்ணயம் செய்யப்படும் ஊதியமானது, திருத்திய ஊதிய நிலையில் அனுமதிக்கப்படும் உச்சபட்ச ஊதியத்திற்கு மிகக்கூடாது என்ற நிபந்தனையுடன் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண்.90, நிதித்(ஊ.பி.) துறை, நாள் 26.02.2021-ல் ஒவ்வொரு ஊதிய நிலைக்கும் (Pay Level) கூடுதலாக ஐந்து தளங்கள் (Cell) உருவாக்கி (மொத்தம் 45 தளங்கள்) ஆணையிடப்பட்டுள்ளது.

4. மேற்கூறிய விதியின் அடிப்படையிலும், அரசாணை (நிலை) எண்.90, நிதித்(ஊ.பி.) துறை, நாள் 26.02.2021-இன் அடிப்படையிலும், இந்நேர்வினை ஆய்வு செய்கையில், 01.01.2016 முதல் தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள், 2017 நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், உச்சபட்ச ஊதியத்தினை அடைந்த ஊழியர்களுக்கு ஒவ்வொரு இரண்டு ஆண்டு தேக்க நிலைக்கும் ஒரு ஊதிய உயர்வு (Biannual Increment) வழங்கும் நடைமுறையானது பின்பற்றப்படவில்லை என அறியப்படுகிறது. எனவே, இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய விகிதம் ஊதிய நிலை 10-இல் ரூ.20600- 75900 என திருத்தி அமைத்து ஆணையிடப்பட்டதனால், ஊதிய நிலை (Level) 10-இல் தளம் (Cell) 40-ஐ (ரூ.65500/-) அடைந்த இடைநிலை ஆசிரியர்களுக்கு மேற்கூறிய அரசாணை (நிலை) எண்.90, நிதித் (ஊ.பி.) துறை, நாள் 26.02.2021-ன்படி, வருடாந்திர ஊதிய உயர்வினை

அனுமதித்திடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இதுகுறித்து சார்நிலை அலுவலர்களுக்குத் தக்க அறிவுறுத்தல்களை உடன் வழங்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள

அரசு முதன்மைச் செயலாளருக்கா